புரட்சிப்

# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஏப்ரல் (April) 16, 2026 • புரட்சி 26 • முழக்கம் (ISSUE) 16 • விலை(PRICE) ரூ.6.00

# எடப்பாடி நடத்திய ‘பாஜக’ பினாமி ஆட்சி!

**எடப்பாடி ஆட்சியில் நடைபெற்ற மக்கள் விரோத செயல்கள் ஒரு தொகுப்பு:**

தமிழ்நாட்டில் எடப்பாடி முதலமைச்சர் ஆக இருந்த காலத்தில் பாஜகவின் பினாமி ஆட்சி தான் நடந்தது. இதற்கு ஏராளமான சான்றுகளை பட்டியலிட முடியும். தமிழ்நாடு பாஜகவினரே எடப்பாடியை மிரட்டி வேலை வாங்கினார்கள். அவர்கள் வைத்த ஒவ்வொரு கோரிக்கைக்கும் எடப்பாடி பணிந்து போனார். உதாரணத்திற்கு சிலவற்றை மட்டும் சுட்டிக் காட்டுகிறோம்.



● தலைமைச் செயலாளராக இருந்த கிரிஜா வைத்தியநாதன் உள்ளிட்ட முக்கிய அதிகார பொறுப்புகளில் ஆர்.எஸ்.எஸ் ஆதரவாளர்களே இருந்தனர்.

● தமிழ் தெரியாதவர்கள் தமிழ்நாட்டில் அரசு பணிகளில் சேரலாம் என்று அரசு தேர்வாணைய விதிகளை திருத்தி எழுதி தமிழ்நாட்டில் அரசு பணிகளிலும் பாலிடெக்னிக் விரிவுரையாளர் பணிகளிலும் பொறியியல் கல்லூரி பேராசிரியர் பணிகளிலும் ஏராளமான வடநாட்டுக்காரர்கள் தமிழ்நாட்டிற்கு உள்ளே நுழைய அதிமுக ஆட்சி எடப்பாடி ஆட்சி அனுமதித்தது.

● 12 பாலிடெக்னிக் கல்லூரிகளில் 1,058 விரிவுரையாளர் பதவிக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் 80 விழுக்காடு வெளி மாநிலத்தவர்களையே தேர்வு செய்தது. திறந்த போட்டியில் மதிப்பெண்களில் குளறுபடி செய்து வடநாட்டவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

● மெக்கானிக் (இன்ஜினியரிங்) விரிவுரையாளர்களுக்கான திறந்த போட்டியில் 67 பேரில் 48 பேர் வெளிமாநிலத்தவர்கள். மின்னணுவியல் பிரிவில் (ECE) தேர்வுசெய்யப்பட்ட 36 பேரில் 31 பேர் வெளி மாநிலத்தவர்கள். உயர் நீதிமன்றமே இதில் தலையிட்டு தேர்வு முடிவுகளை நிறுத்தி வைத்தது. எடப்பாடி மவுனமாக இவ்வளவு முறைகேடுகளுக்கும் பச்சைக்கொடி காட்டினார்.

● அய்.அய்.டி மற்றும் அய்.அய்.எம் போன்ற உயர் கல்விக்கான நுழைவுத் தேர்வுகள் ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் மட்டுமே நடத்தப்பட்டன. இது தவிர அனுமதிக்கப்பட்ட ஒரே மாநில மொழி குஜராத் மட்டும்தான். அப்படியானால் தமிழில் ஏன் தேர்வு எழுத உரிமையில்லை என்று எடப்பாடி தட்டிக் கேட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் கேட்கவில்லை.

● தெற்கு ரயில்வேயில் மாநில மக்களுக்கே தரப்பட வேண்டிய வேலைகளில் 90 சதவீதம் வடநாட்டவர்களுக்கு தாரைவாக்கப்பட்டது; எடப்பாடி இதை தட்டி கேட்கவில்லை; கைகட்டி நின்றார்.

● மருத்துவ உயர்பட்டப் படிப்பில் பிற்படுத் தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை மோடி ஆட்சி ரத்து செய்த போது எடப்பாடிமவுனம் சாதித்தார். திமுக ஆட்சியில் தான் முதல்வர் சட்டப் போராட்டம் நடத்தி இந்த உரிமையை மீட்டுத் தந்தார்.

● பொறியியல் பட்டப்படிப்பு படிக்கும் தலித் மாணவர்களுக்கு அரசு வழங்கிய உதவித்தொகை ரூ.85,000 ரூ.50,000 ஆக குறைத்தார் எடப்படி.

● ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்; ராஜீவ் கொலையில் குற்றம் சாட்டப்பட்ட ஏழு தமிழர்களையும் விடுதலை செய்ய வேண்டுமென்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியவர் ஜெயலலிதா.

● இதற்கு நேர் மாறாக ஈழப் போராட்டத்தில் உயிர் நீத்த போராளிகளுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வுக்கு தமிழக பாஜகவின் மிரட்டலுக்கு பணிந்து எடப்பாடி தடை போட்டார்;

● மே 17 இயக்கத்தைச் சார்ந்த திருமுருகன் காந்தி உள்ளிட்ட தோழர்கள் மீது குண்டர் சட்டத்தை ஏவினார் எடப்பாடி.

● பல மாதங்கள் சிறைவாசத்திற்குப் பிறகு நீதிமன்றம் வழியாக விடுதலை பெற்ற தோழர்கள் சென்னை ராயப்பேட்டையில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்ததும் குற்றம் என்று அறிவித்து வழக்கு பதிவு செய்தார் எடப்பாடி.

● அயோத்தி ராமன் கோயில் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும் போது சங்பரிவாரங்கள் அயோத்தியில் இருந்து ராமேஸ்வரம் வரை ராமன் ரத யாத்திரை ஒன்றை நடத்தினார்கள். ஒன்றிய உள்துறை அமைச்சகமே தமிழ்நாடு உள்துறைக்கு நேரடியாக ஆணையிட்டு இந்த ரத யாத்திரையை அனுமதிக்க வேண்டும் என்று கூறியது.

● தமிழ்நாட்டில் மதக் கலவரத்தை உருவாக்கும் இந்த யாத்திரையை அனுமதிக்கக் கூடாது என்று திமுக உள்ளிட்ட மதச்சார்பற்ற கட்சிகள் எதிர்த்த நிலையிலும் எடப்பாடி அந்த ஊர்வலத்தை அனுமதித்தார்.

● சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக மு.க.ஸ்டாலின் இதை எதிர்த்த போது "இது மத ஊர்வலம்; அரசியலுக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும்,

பிற மாநிலங்களில் அனுமதிக்கும் போது ஏன் தமிழ்நாட்டில் அனுமதிக்க கூடாது என்றும் ஆர்.எஸ்.எஸ் குரலிலேயே பேசினார் அதற்கு மு.க. ஸ்டாலின் இது பெரியார் மண் என்று பதிலடி தந்தார்.

● தமிழ்நாட்டில் பெரியார் சிலைகளை உடைக்க வேண்டும் என்று எச்.ராஜா முகநூலில் பதிவிட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடே கொந்தளித்தது. ஆனால் அவர் மீது எந்த வழக்கையும் எடப்பாடி பதிவு செய்யவில்லை.

● ஆளுநராக இருந்த பன்வாரிலால் புரோஹித் நேரடியாக அரசு நிர்வாகங்களில் தலையிட்டார். அரசு அலுவலகங்களை ஆய்வு செய்ய புறப்பட்டார். இந்த அத்துமீறலை கண்டித்து எதிர்க்கட்சியான திமுக தான் போராடியது. முதல்வர் பதவியில் இருந்த எடப்பாடி வாய்மூடி மவுனம் சாதித்தார் .

● பல்கலைக்கழக துணை வேந்தர்கள் நியமனத்தை ஆளுநரே பறித்து 16 பல்கலைக் கழகங்களுக்கு வெளி மாநிலங்களை சேர்ந்தவர்களையும் சங்கிகளையும் துணைவேந்தராக நியமித்தார்.

● ஏற்கனவே ஜெயலலிதா ஆட்சி காலத்தில் ஆளுநராக இருந்த சென்னா ரெட்டி இப்படி தலையிட்ட போது ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்று சட்டம் இயற்றி அதை சென்னா ரெட்டி வாய் வழியாகவே ஆளுநர் உரையில் படிக்கச் செய்தவர் ஜெயலலிதா. ஆனால் எடப்பாடி பாஜக மிரட்டலுக்கு பயந்து கைகட்டி நின்றார். அவரது அமைச்சரவையில் இடம்பெற்ற ஜெயக்குமார் ஆளுநரின் இந்த உரிமை பறிப்பை நியாயப்படுத்தி பேசினார்.




● திரைப்பட விழா ஒன்றில் பேசிய இயக்குனர் பாரதிராஜா விநாயகன் கடவுள் வடநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒன்று என்ற வரலாற்றுத் தகவலை, பேசியதற்காக,சங்கிகள் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாய்ந்தார்கள்; உடனே பாரதிராஜா மீது வழக்கு பதிவு செய்தார் எடப்பாடி!

● ஒரு குலத்துக்கு ஒரு நீதி பேசும் மனு சாஸ்திரத்தை எதிர்ப்பதே குற்றம் என்றார் எடப்பாடி; விசிக தலைவர் திருமாவளவன் மனுசாஸ்திரம் பெண்களை அடிமைப்படுத்துவதை சுட்டிக்காட்டி பேசிய போது தமிழக பாஜகவினர் திருமாவளவன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மிரட்டினார்கள். உடனே அவர் மீது 6 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தார் எடப்பாடி.

● தமிழ்நாடு அரசு அறிவித்த தமிழ்நாடு உதயமான நாளை தமிழருக்கான கொடியேற்றி கொண்டாடியதற்காக தோழர் பொழிலனை கைது செய்து சிறையில் அடைத்தார் எடப்பாடி!

● அமைச்சரவை நிறைவேற்றிய நீட் விலக்கு தீர்மானத்தைஏற்க மறுத்து குடியரசு தலைவர் அனுப்பிய கடிதத்தை ஓராண்டு காலம் மக்களுக்கு தெரியாமல் மூடி மறைத்தார் எடப்பாடி; மீண்டும் ஒருமுறை சட்டசபையில் தீர்மானமாக நிறைவேற்றி அனுப்பலாம் என்ற கோரிக்கையையும் ஏற்க மறுத்தார்.

● தமிழ்நாடு முதல்வர் மு.க ஸ்டாலின்தான் இந்த வாய்ப்பையும் பயன்படுத்தி 2 முறை சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது; மருத்துவ கவுன்சிலை, கூடுதல் அதிகாரங்களோடு மருத்துவத் தேர்வாணையமாக மாற்றி நீட் திணிப்பை சட்டபூர்வமாக உறுதியாக்கிய போதும் ஒன்றிய ஆட்சியை வாய் திறந்து கண்டிக்கவில்லை எடப்பாடி!

● கந்த சஷ்டி கவசம் என்ற முருக பக்திப் பாடலில் உள்ள வரிகளை அப்படியே எடுத்து ஒளிபரப்பிய கருப்பர் கூட்டம் என்ற youtube மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சங்கிகள் எடப்பாடி ஆட்சியை மிரட்டினார்கள். பக்தி இலக்கியத்தில் உள்ள பாடல் வரிகளே இந்துக்கள் மனதை புண்படுத்துகிறது என்று கூப்பாடு போட்டார்கள். எடப்பாடி அந்த வலையொலியை (youtube) முடக்கினார். அதில் பதிவேற்றப்பட்ட அனைத்து பதிவுகளையும் சட்ட விரோதமாக காவல்துறை நீக்கியது. அதைத் தொடர்ந்து அந்த வலையொலியை (youtube) நடத்திய நாத்திகன் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தார்.

● இந்தக் கைதை கண்டித்து அறிக்கை வெளியிட்ட மறைந்த இயக்குநர் வேலுபிரபாகரனையும் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். பாஜகவையோ, கட்சிகளையோ எதிர்த்து பேசவோ, அறிக்கை விடவோ அச்சப்படுகிற சூழலை உருவாக்கினார் எடப்பாடி.

● அதே நேரத்தில் தமிழ்நாட்டில் பாஜகவினர் சட்டங்களை தங்களது கையில் எடுத்துக்கொண்டு சுதந்திரமாக வெறியாட்டம் போட்டனர் .அவர்களுக்கு எந்த தடையும் இல்லை!

● பாஜகவை எதிர்க்கும் கருத்தரங்குகள்; பொதுக்கூட்டங்கள்; நிகழ்ச்சிகள் எல்லாவற்றுக்கும் தடை போடப்பட்டன. ஒவ்வொரு முறையும் நீதிமன்றம் சென்று அனுமதி பெற்று தான் கூட்டங்களை நடத்த வேண்டிய நிலையே இருந்தது.

● அய்.நாவின் விவாத அரங்கு ஒன்றில் தூத்துக்குடி துப்பாக்கி சூடு பற்றி உரையாற்ற சென்ற திருமுருகன்காந்தி நாடு திரும்பியபோது பெங்களூரு விமான நிலையத்தில் தேச விரோத சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

● மாடுகளை இறைச்சிக்கு விற்கக் கூடாது என்று ஒன்றிய அரசு கொண்டு வந்த சட்டத்தை அமல்படுத்த மாட்டோம் என்று கேரளா; புதுவை; மேகாலயா சட்டமன்றங்கள் தீர்மானங்களை நிறைவேற்றின. பாஜக ஆட்சி செய்த கோவா மாநிலமும் இதை எதிர்த்தது. ஆனால் தமிழ்நாட்டில் சரணாகதி எடப்பாடி ஆட்சி இதை அமல்படுத்தவே துடித்தது. சட்டத்தை எதிர்க்க மாட்டோம் என்று பேட்டியளித்தார் எடப்பாடி. இந்த சட்டத்தை எதிர்த்து நடத்தப்பட்ட மாட்டுக்கறி விருந்து நிகழ்ச்சிகளை தடை செய்தார்; பாஜக எதிர்த்தால் அவர்கள் மீது வழக்குகளை பதிவு செய்தார். உணவுத் திருவிழாவில் மாட்டிறைச்சி சங்கிகளின் எதிர்ப்பால் தடை செய்யப்பட்டது.

● மாதம் ஒரு லட்சம் ரூபாய் ஊதியம் வரக்கூடிய அருங்காட்சியகத்தின் ’கியுரேட்டர்’என்ற பதவிக்கு தமிழ்நாட்டில் விண்ணப்பம் செய்ய சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்று எடப்பாடி ஆட்சியின் தேர்வாணையம் விளம்பரம் செய்தது.

● இந்த பதவிகளை வேதம் படித்த கும்பலுக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அதிகார வர்க்கம் செய்த இந்த சூழ்ச்சிக்கு எடப்பாடி உடந்தையாக இருந்தார்.

இந்து பயங்கரவாதிகளால் கர்நாடக பத்திரிகையாளர் கவுரி லங்கேஷ் சுட்டுக் கொல்லப்பட்டதை கண்டித்து சென்னையில் கலை இலக்கியவாதிகள் அக்டோபர்-2ம் தேதி காந்தி சிலைக்கு மாலை அணிவிக்க வந்தார்கள். இருவர் உயிரையும் கொன்ற துப்பாக்கி குண்டுகளின் தத்துவம் மதவெறிதான் என்ற நோக்கோடு மாலையிட வந்தவர்களை கைது செய்து வழக்கு பதிவு செய்தது எடப்பாடி ஆட்சி.

● தேசத் தந்தை பிறந்தநாளில் அவருக்கு மாலை அணிவிப்பதே எடப்பாடி ஆட்சியில் குற்றமா? எடப்பாடி நடத்தியது சங்கிகளின் ஆட்சி என்பதற்கு இது ஒரு வலிமையான சான்று!


● ராஜிவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 7 தமிழர் விடுதலைக்கு அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு எடப்பாடி கடமையை முடித்துக் கொண்டார். ஒன்றிய அரசுக்கு எந்த அழுத்தமும் தரவில்லை. மு.க.ஸ்டாலின் முதல்வராக வந்த பிறகு தான் அவர்களுக்கான விடுதலையை சட்டப்போராட்டம் நடத்தி உறுதி செய்தார்!

**தொடர்ச்சி 2ம் பக்கத்தில்**

# வடநாட்டு பிடிக்குள் தமிழ்நாட்டை அடகுவைக்கும் ஆபத்து!

தொகுதி மறு வரையால் தமிழ்நாட்டுக்கு எந்த பாதிப்பும் வராது என்று மோடியே கூறிவிட்டார் என்கிறார் எடப்பாடி பழனிசாமி. கட்சியை பாஜகவிடம் அடகு வைத்த எடப்பாடி, இப்போது தமிழ்நாட்டின் உரிமையையும் வெட்கப்படாமல் அடகு வைக்கிறார். இதனால் நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவம் மிக மோசமாக பாதிக்கப்படுவதை கவலையோடு சுட்டிக்காட்டி கண்டனக் குரலை எழுப்பி வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

ஆனால் தமிழ்நாட்டு மக்கள் உரிமைகளையே அடகு வைத்துவிட்டு முதலமைச்சர் நாற்காலியில் உட்கார துடிக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி. தேர்தல் ஆதாயத்திற்காக ஏற்கனவே அறிவித்த தனது கொள்கைகளை திடீரென்று மாற்றிக் கொண்டு, நாடாளுமன்றத்தை அவசரமாக கூட்டி பெண்களுக்கான மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டை கொண்டு வர ஒன்றிய ஆட்சி துடிக்கிறது.




2023 ஆம் ஆண்டு செப்டம்பரில் நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு தனி இட ஒதுக்கீடு வழங்கும் 106 ஆவது சட்டத் திருத்தத்தை மோடி ஆட்சி கொண்டு வந்தது. அப்போது இதை அமல்படுத்தும் காலத்தை தள்ளிப் போட்டது. 2006 ஆம் ஆண்டு ஜாதி வாரி கணக்கெடுப்போடு மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்ததற்குப் பிறகு அதன் அடிப்படையில் தொகுதி மறு வரையறை செய்து முடித்து இந்த இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படும் என்று ஒன்றிய ஆட்சி கூறியது. இப்போது திடீரென முடிவை மாற்றிக் கொண்டு 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின் அடிப்படையிலேயே கொண்டு வர திட்டமிடுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை எந்த ஆய்வோ; ஆலோசனைகளோ இல்லாமல் உத்தேசமாக 50 சதவீதம் உயர்த்தப் போவதாக முடிவெடுத்திருக்கிறது; அதுவும் 15 ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த மக்கள் தொகையின் அடிப்படையில்! இதனால் இந்தி பேசும் உ.பி,பீகார் என்ற இரண்டு மாநிலங்களுக்கு மட்டும் 180 நாடாளுமன்ற இடங்கள் கிடைக்கின்றன. 5 தென் மாநிலங்களுக்கும் சேர்த்து 195 நாடாளுமன்ற இடங்கள் தான்!

தென் மாநிலங்கள் 66 நாடாளுமன்ற தொகுதிகளை இழக்கின்றன; வட மாநிலங்களுக்கு 142 இடங்கள் கூடுதலாக கிடைக்கின்றன . ஒன்றியத்தின் பிரதமராக வரும் கட்சிக்கு தென் மாநிலங்களின் ஆதரவே தேவையில்லை என்ற நிலை வந்துவிடும். தமிழ்நாடு முதல்வர் மு.க ஸ்டாலின் ஏற்கனவே அனைத்து கட்சியினர் கூட்டத்தைக் கூட்டி தமிழ்நாட்டின் ஒருமித்த எதிர்ப்பை பதிவு செய்திருக்கிறார். பெண்களுக்கான இடஒதுக்கீட்டில் தனது முடிவை பாஜக ஆட்சி திடீரென்று மாற்றிக் கொண்டது ஏன்? அடுத்தடுத்து வர இருக்கும் தேர்தல் ஆதாயங்களுக்காகத் தான்! பெண்களுக்கான இட ஒதுக்கீடும் இதனால் பாதிக்கப்படுகிறது; ஜாதிவாரி கணக்கெடுப்பு இல்லாமல் பெண்களுக்கான உள் இட ஒதுக்கீடுகளை எப்படி நிர்ணயிக்கப் போகிறார்கள்? சுழற்சி முறையில் ரிசர்வ் தொகுதிகளை நிர்ணயிப்பதற்கும் 2026 -27 இல் எடுக்கப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு தேவைப்படுகிறது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மட்டும் அடிப்படையாக கொள்ளப்படுவதால் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிய தென் மாநிலங்கள் பாதிக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தை பின்பற்றாத வட மாநிலங்கள் கூடுதல் பெறுகின்றன. இந்தியாவின் ஆட்சி அதிகார அமைப்பிலிருந்து தென் மாநிலங்களை ஒதுக்கி வைக்கும் மிகப்பெரும் ஆபத்து இதில் அடங்கி இருக்கிறது. இந்த ஆபத்துகளை உருவாக்கும் முதலாளி மோடியே இதை சரி செய்து விடுவார் என்ற எடப்பாடியின் துரோகக் குரலை கண்டிப்பதற்கு வார்த்தைகளே இல்லை இந்த துரோகத்தை மன்னிக்கவே முடியாது! தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் நடக்கும் போராட்டம் தான் இந்த தேர்தல் களம் என்று முதல்வர் மு.க ஸ்டாலினின் முழக்கம் மேலும் மேலும் உறுதியாகிறது!

# பெரு முதலாளிகளின் கடன் தள்ளுபடியில் மோசடி

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.. வங்கிகள் மற்றும் நாட்டின் பெரு முதலாளிகளுக்கு வாராக் கடனை தள்ளுபடி செய்தது ரூ. 14 இலட்சம் கோடியா? ரூ.25 இலட்சம் கோடியா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

கடந்த ஆகஸ்-7, 2023 நாடாளுமன்ற கூட்டத்தொடரில் திமுக எம்.பி கனிமொழி வாராக் கடன் குறித்து எழுப்பிய கேள்விக்கு நிதித்துறை இணையமைச்சர் பகவத் காரத் இவ்வாறு பதில் அளித்துள்ளார். 2014-ம் நிதியாண்டு முதல் 2022-ம் ஆண்டு வரை ரூ.14,56,226 வாராக் கடனை தள்ளுபடி செய்ததாக தெரிவித்தார். இந்த தகவலை ஒப்பிட்டு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் வழியாக ரிசர்வ் வங்கிக்கு உண்மையில் வாராக் கடன் தள்ளுபடி எவ்வளவு? என்று குஜராத்தை சேர்ந்த சஞ்சய் என்பவர் மனு அளித்திருந்தார். ரிசர்வ் வங்கி கடந்த 9 ஆண்டுகளில் ரூ.25 இலட்சம் கோடி ரூபாய் வாராக் கடனை தள்ளுபடி செய்ததாக தெரிவித்திருந்தது.

ஆகவே நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தில் கனிமொழி எம்.பி எழுப்பிய கேள்விக்கு அளித்த ரூ.14 இலட்சம் கோடி உண்மையா அல்லது ரிசர்வ் வங்கி தந்த பதிலில் ரூ.25 இலட்சம் கோடி உண்மையா? என்ற அதிர்ச்சி சந்தேகம் நாடு முழுவதும் எழுந்தது. இரண்டு தகவல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஏறக்குறைய 11 லட்சம் கோடி ரூபாய் கணக்கில் காட்டாமல் மறைக்கப்பட்டதாகவே தெரிகிறது. பெரும் முதலாளிகள் வாங்கிய வாராக் கடனை தள்ளுபடி செய்து ஏழை எளிய மக்களின் வயிற்றில் அடித்தவர் மோடி.

# விளம்பரத்துக்கு வீண்செலவு செய்யும் மோடி அரசு

நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் எம்பி ஷபி பரம்பில் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு அளிக்கப்பட்ட பதிலில், கடந்த டிசம்பர் மாதத்துடன் முடிந்த 5 ஆண்டுகளில் மட்டும் விளம்பரத்துக்கு ரூ2,447 கோடியை ஒன்றிய அரசு செலவிட்டுள்ளது. இதன்படி நாளொன்றுக்கு ரூ.1.34 கோடி செலவாகியுள்ளது.




மின்னணு, அச்சு ஊடகங்கள், விளம்பர பலகைகள் உள்ளிட்டவை இதில் அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆண்டு வாரியாக 2020-21 நிதியாண்டில் ரூ.409.55 கோடி, 2021-22 ஆண்டு ரூ.317.48 கோடி, 2022-23 ஆண்டு ரூ.408.37கோடி, 2023-24 ஆண்டு ரூ.656.6 கோடி, 2024-25 ஆண்டு ரூ.654.9 கோடி செலவிடப்பட்டுள்ளது.

மோடி அரசின் விளம்பர செலவில் 5 அமைச்சகங்கள் மூலம் மேற்கொண்ட விளம்பரங்கள் மட்டுமே 60 சதவீதத்தை தாண்டிவிட்டன. கடந்த 2024-26 நிதியாண்டில் ரூ.526.90 கோடி விளம்ப ரத்துக்கு செலவிடப்பட்டுள்ளது. இதில் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் ரூ.208.35 கோடி, நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோகம் ரூ.42.51 கோடி, பாதுகாப்பு அமைச்சம் ரூ.31 கோடி, நிதியமைச்சகம் ரூ.16 கோடி, சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சகம் ரூ.21.5 கோடி செலவிட்டுள்ளன என புள்ளி விவரம் ஒன்று தெரிவிக்கிறது.

மேலும், மேற் கண்ட நிதியாண்டில் டிவி மற்றும் டிஜிட் டல் விளம்பர செலவு மட்டும் ரூ.406.12 கோடியாகி விட்டது. இதன் பங்களிப்பு 77.2 சதவீதம். அதேநேரத்தில் அச்சு ஊடகங்களுக்கான செலவு 40 சதவீதம் குறைந்து ரூ.119.78 கோடியாகி விட்டது முந்தைய ஆண்டில் இது ரூ.202 கோடியாக இருந்தது. இதுபோல், சமூக வலைதளங்கள் மூலம் விளம்பரம் செய்ய ரூ.9.85 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது கடந்த 2025-26 நிதியாண்டில் ரூ.14.06 கோடியாக உயர்ந்துள்ளது. தெரியவந்துள்ளது.

முதல் பக்க தொடர்ச்சி..

● இந்து மத செயல்பாடுகளுக்கு கல்வி வளாகங்களை சுதந்திரமாக திறந்து விட்டார் எடப்பாடி. இது சட்ட விரோதம். எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோது தடை விதித்திருந்தது.

● சேலம் பெரியார் பல்கலைக்கழகம் பாஜகவின் செயலகமாக மாறியது துணைவேந்தர் அறை எச்.ராஜாவின் அலுவலகமானது.

●நடத்திய 'நிவேதிதா' "(இவர் விவேகானந்தரின் சிஷ்யை) யாத்திரையை ஒவ்வொரு கல்வி வளாகத்துக்குள்ளும் அனுமதித்தார் எடப்பாடி; இதில் மாணவர்கள் பங்கேற்பை கட்டாயப்படுத்தி ஆணையிட்டார் துணைவேந்தர் குழந்தைவேலு!

● ஜி.எஸ்.டி வருவாயில் உரிய பங்கு வழங்கப்படவில்லை என்றும் காஜ புயல் நிதி வரவில்லை என்றும் நிர்மலா சீதாராமனிடம் எடப்பாடி நேரில் வலியுறுத்தியும் நிதி நிலை அறிக்கையில் நிர்மலா புறக்கணித்தார். ஆனாலும் கண்டிக்க துணிவில்லை; நிதிநிலை அறிக்கையை பாராட்டி வரவேற்று அறிக்கை விட்டார் எடப்பாடி!

● மாட்டு இறைச்சி உணவை வரவேற்று முகநூலில் பதிவிட்டதற்காக திராவிடர் விடுதலைக் கழகத்தின் கோவை மாவட்ட தோழர் நிர்மல்குமார் மீது பிணையில் வெளிவர முடியாத சட்டப்பிரிவில் கைது செய்து சிறையில் அடைத்தார்கள்.

● ஆண்டுதோறும் கலவரத்தை உருவாக்கும் நோக்கத்தோடு நடத்தப்படும் விநாயகன் ஊர்வலத்துக்கு நீதிமன்றம் விதித்த பல நிபந்தனைகளை நீக்கினார் எடப்பாடி; பல்வேறு துறைகளிடமிருந்து பெறவேண்டிய அனுமதிகளை காவல்துறையே பெற்றுத் தரும் என்று அறிவித்ததோடு; ஒவ்வொரு விநாயகரின் சிலைக்கும் காவலர்களை பாதுகாப்பாக நியமித்தார்.

● அதிமுக ஆட்சியில் 1,100 அரசு பள்ளிகள் இழுத்து மூடப்பட்டன. நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி மிக மோசமாக குறைக்கப்பட்டது.

●"பிராமண" சங்கத்தின் கோரிக்கையை ஏற்று பாடத்திட்டத்திலிருந்து நீதிக்கட்சி வரலாறு நீக்கப்பட்டது. 9 மற்றும் 10வது வகுப்பு சமூக அறிவியல் பாடத்தில் பெரியார் பெயருக்கு பின்னால் நாயக்கர் என்ற ஜாதி சேர்க்கப்பட்டது;

● ஹிட்லர் மற்றும் முசோலினி கொள்கை முற்போக்கானவை என்றும்; கோயில்களில் தேவதாசி முறை பெருமைக்குரியது என்றும் அவர்கள் "ஆலய சேவகிகள்" என்றும் எழுதினார்கள்; அரசுத் துறையில் ஊடுருவியிருந்த சங்கி அதிகாரிகளின் இந்த திணிப்புகளை எடப்பாடி கண்டு கொள்ளவே இல்லை!

● கோட்சேவுக்கு சிலை வைக்கப் போவதாக சங்கிகள் வெளிப்படையாகவே பேசினார்கள். இவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. ஆனால் இதைக் கண்டித்து நடந்த கூட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

● குறிப்பாக ஈரோட்டில் காந்தியை சுட்டுக்கொன்ற கோட்சேவுக்கு சிலை வைப்பதை கண்டித்து பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் "காந்தியை சுட்டுக்கொன்ற" என்ற வாசகத்தை நீக்கினால்தான் கூட்டத்திற்கு அனுமதி வழங்கப்படும் என்று எடப்பாடி ஆட்சி நிபந்தனை விதித்தது!

இதைத் தவிர பாஜக ஆட்சிய கொண்டு வந்த அனைத்து மக்கள் விரோத சட்டங்களுக்கும் ஆதரவு அளித்தார் எடப்பாடி. உதய் மின்திட்டம், உணவு பாதுகாப்பு சட்டம், குடியுரிமை திருத்தச் சட்டம், விவசாயிகளின் சட்டம், முத்தலாக் சட்டம் என மாநில உரிமைகளைப் பறித்த காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ரத்து சட்டம் மற்றும் டெல்லி யூனியன் பிரதேச அதிகாரங்கள் பறிப்பு சட்டமும் இதில் அடங்கும். ஆட்சியை பாஜகவிடம் அடிமையாக்கிக் காட்டியவர்தான் இப்போது மீண்டும் தமிழ்நாட்டை காட்டிக் கொடுக்க வாக்கு கேட்டு வருகிறார். இப்படி ஏராளமாக பட்டியலிட்டுக் காட்ட முடியும்.

**விழித்துக் கொள்வோம்! விரட்டி அடிப்போம்!**

**தொகுப்பு: விடுதலை இராசேந்திரன்**

# தேர்தல் களம்; மக்களிடம் கூறுவோம்

தமிழ்நாட்டு அரசியல் களங்களின் தொகுப்பு:

## தமிழ்நாடு கடனில் தவிக்கிறதா? எடப்பாடிக்கு மறுப்பு

தமிழ்நாட்டு தற்போது 5 இலட்சம் கோடி கடன் இருப்பதாக கதை சொல்லி வருகிறார் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அவரது சகாக்கள். 2011-2020 வரை 9 ஆண்டுகள் எடப்பாடி ஆட்சியின் கடனே வாங்காது போலவும் திமுக 5 ஆண்டுகளில் கடன் வாங்கி குவிப்பது போல் பேசி வருகிறார்கள்.

**ஆனால் உண்மை நிலவரம் என்ன தெரியுமா?** 2006-2011 திமுக ஆட்சியில் ரூ.43,893 கோடி கடன்; 2011-2016 அதிமுக ஆட்சியில் ரூ.1,09,717 கோடி கடன். அதாவது முந்தைய ஆட்சியை விட 150 விழுக்காடு அதிகம் கடன் வாங்கியது அதிமுக ஆட்சி தான். எடப்பாடி முதலமைச்சராக இருந்த 2016-2021 அதிமுக ஆட்சியில் வாங்கிய கடன் ரூ.2,74,436 கோடி இது முந்தைய ஆட்சியை ஒப்பிட்டு பார்த்தால் 150 விழுக்காடு அதிகம் கடன் வாங்கியது எடப்பாடி ஆட்சி தான். 2021 ஆண்டு அறிக்கையின் படி தமிழ்நாட்டின் மொத்த கடன் ரூ.4,85 இலட்சம் கோடி.




தற்போது திமுக ஆட்சி (2021-2026) ஆண்டில் வாங்கப்பட்ட கடன் 4,67,457 இலட்சம் கோடி. கடந்த 5 ஆண்டுகளை ஒப்பிட்டு பார்த்தால் 70 விழுக்காடு தான் கடன்.

ஆக கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் கட 150 விழுக்காடாக இருந்தது. தற்போது திராவிட மாடல் ஆட்சியில் 70 விழுக்காடாக கடன் குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மொத்த வளர்ச்சியில் கடன் எவ்வளவு என்று பார்த்தால் கடந்த அதிமுக ஆட்சியின் இடைக்கால பட்ஜெட்டில் 26.69% விழுக்காடு. திமுக ஆட்சியில் ஜிடிபி விகிதப்படி 26.43 விழுக்காடு. ஆகவே கடன் பெரிய அளவில் அதிகரிக்கவில்லை என்பது தான் உண்மை. ஒரு மாநிலத்தின் கடன் என்பது அந்த மாநிலத்தின் பலவீனத்தை காட்டக் கூடிய குறியீடு அல்ல. கடன் என்பது பொருளாதாரத்தின் ஒரு அங்கம். குறைவான கடன் வாங்கினால் பொருளாதார புலியும் அல்ல! அதிக கடன் வாங்கினால் அவமானம் என்று கணக்கு செய்தால் அதானி, அம்பானியை விட சாமானிய மக்கள் தான் பெரும் பணக்காரர்கள்.

## மெட்ரோ இரயிலுக்கு தமிழ்நாட்டின் பங்கு அதிகம்!

தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டு திமுக ஆட்சியில் எந்த ஒரு திட்டத்தை கொண்டு வரவில்லை என்று எடப்பாடி தோல்வி பயத்தில் கதறி வருகிறார். அதிமுக ஆட்சியில் தான் சென்னை போக்குவரத்து குறைக்க மெட்ரோ-2 கட்ட பணிகளை மேற்கொள்ள ரூ.63,000 கோடி அனுமதி பெற்று திட்டத்தை கொண்டு வந்ததாக கூறி வருகிறார்.



இதுவரை இந்தியாவில் ரூ 63,000 கோடிக்கு ஒரு திட்டத்துக்கு ஒன்றிய அரசிடம் இருந்து அனுமதி , கிடைத்தது இல்லை இதுவே முதல் முறை என்று இறுமாப்புடன் பேசுகிறார் எடப்பாடி. உள்துறை அமைச்சர் அமித் ஷாவை வைத்து அடிக்கல் நாட்டினர் என்று பெருமிதத்துடன் திமுக ஆட்சியில் இப்படி எதாவது பெரிய திட்டத்தை சென்னைக்கு கொண்டு வந்தீர்களா என்று கேள்வி எழுப்புகிறார் எடப்பாடி.

**உண்மை என்ன தெரியுமா?** சென்னையின் 2-ம் கட்ட மெட்ரோ பணிக்கான மதிப்பீடு 63,246 கோடி. இதற்கு எப்படி வருவாய் வருகிறது என்று சென்னை மெட்ரோ நிர்வாகம் தந்த ஆண்டறிக்கையின் படி பார்த்தால் ஒன்றிய அரசு தருகிற நிதி 7,424.9 கோடி மட்டுமே. தமிழ்நாடு அரசின் பங்கு அதே 7,424.9 கோடி. மீதம் உள்ள தொகை சர்வதேச நிறுவனங்களிடமிருந்து அதாவது ஜப்பான் இண்டர்நேசனல் காப்ரேசன் ஏஜின்சி (Jica), ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய வங்கிகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து கடனாக வாங்கியது. இந்த கடனை திருப்பி செலுத்த வேண்டியது தமிழ்நாடு அரசுதான்.

நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட இதர செலவுகள் ரூ.14,743 கோடி தமிழ்நாடு அரசுதான் செலவு செய்கிறது. ஒட்டுமொத்தமாக பார்த்தால் ரூ.22,173 கோடி செலவிடுவது தமிழ்நாடு அரசுதான். ஆகவே ஒன்றிய அரசை விட தமிழ்நாடு அரசுதான் 2-ம் கட்ட மெட்ரோ இரயில் திட்டத்துக்கு செலவு செய்கிறது. இந்த உண்மைகளை மூடி மறைத்து மோடி ஆட்சிக்கு புகழ் பாடுகிறார் எடப்பாடி.

## அன்புமணியின் அற்பத்தனமான உளறல்கள்!

பாமக தலைவர் அன்புமணி திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் மதுவால் அதிக சாலை விபத்துக்கள் நடக்கும் மாநிலம் தமிழ்நாடு என்று வாட்ஸ்அப் வதந்தியை பேசியுள்ளார். ஆனால் உண்மை என்ன தெரியுமா?

ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளள 2023 ஆண்டு சாலை விபத்துக்கான விவரத்தில் மது போதையில் நிகழ்ந்த வாகன விபத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கை பதிவுகளில் தமிழ்நாடு 7வது இடத்தை பிடித்துள்ளது. ஆண்டுக்கு 320 விபத்துக்கள் நடைபெற்றுள்ளது. ஆனால் பாஜக ஆளும் மாநிலங்களில் உ.பியில் 3808-ஆகவும், ம.பி-1209 ஆகவும், ஒடிசா-649 ஆகவும் முதல் 3 இடங்களை பிடித்துள்ளது.

மதுபோதை வாகன விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கையில் 74 பேர் இறந்ததாகவும் 14வது இடத்தை பிடித்துள்ளது தமிழ்நாடு. ஆனால் உ.பியில் இறந்தவர்கள் எண்ணிக்கை 1822. ஒடிசாவில் 254 மற்றும் ம.பியில் 219 பேர் மதுபோதையின் காரணமாக வாகன விபத்தில் இறந்துள்ளனர். உண்மையை மறைத்து பொய் பரப்புரையை செய்து வருகிறார் அன்புமணி.

## அதிகாரிகளை மாற்ற தேர்தல் ஆணையத்துக்கு உரிமை உண்டா?

தேர்தல் ஆணையம் தனது அதிகார வரம்பை மீறி தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளர்; காவல்துறை இயக்குனர் ; உளவுத்துறை இயக்குனர் போன்ற உயர் அதிகாரிகளை இடமாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளது. அமித்ஷாவை சந்தித்த எடப்பாடி அவரிடம் அதிகாரிகள் இடமாற்றலை வலியுறுத்தினார் என்ற செய்தி ஏற்கனவே வந்தது. பாஜகவின் கைப்பாவையாக தேர்தல் ஆணையம் செயல்படுவது உறுதியாகி உள்ளது.

மேற்கு வங்கத்தில் தேர்தல் ஆணையம் அதிகாரிகளை கண்மூடித்தனமாக இடமாற்றம் செய்வதை எதிர்த்து மம்தா நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். உச்ச நீதிமன்றம் அதிகாரிகளின் இடமாட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறது. இப்போது தமிழ்நாட்டில் தேர்தல் ஆணையம் இந்த நாடகத்தை துவங்கி இருக்கிறது. உண்மையிலேயே உயர் அதிகாரிகளை இப்படி பந்தாடும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு இருக்கிறதா? இதுகுறித்து நாடாளுமன்றத்தின் முன்னாள் செயலாளர் பி.டி.டி ஆச்சாரி 'இந்து' ஆங்கில நாளேட்டில் விரிவான கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார். (ஏப்ரல்-3,2026) அதில் இடம்பெற்றுள்ள கருத்துக்களை சுட்டிக்காட்டுகிறோம்.

- சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்கான முழு அதிகாரத்தையும் தேர்தல் ஆணையத்திற்கு அரசியல் சட்டத்தின் 324 வது பிரிவு வழங்கியிருந்தாலும் அந்த அதிகாரம் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. உச்சநீதிமன்றம் பல வழக்குகளில் இதை தெளிவுபடுத்தி இருக்கிறது.
- குறிப்பாக மொகிந்தர்சிங் தேர்தல் ஆணையர் வழக்கு மிகவும் முக்கியமானது (1978).
- சுதந்திரமான தேர்தல் நடத்துவதற்கு தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்ட உரிமையை மனம் போன போக்கில் செயல்படுத்த முடியாது.
- நாடாளுமன்றமும் சட்டமன்றமும் நிறைவேற்றியுள்ள சட்டங்கள் அமுலில் உள்ள போது தேர்தல் ஆணையம் அந்த சட்டங்களோடு இணைந்து செயல்பட வேண்டுமே தவிர, அதை மீறும் முயற்சிகளில் இறங்க கூடாது.
- அய்.ஏ.எஸ் மற்றும் அய்.பி.எஸ் அதிகாரிகள் மாநில அரசுக்கு கட்டுப்பட்டவர்கள். அரசியல் சட்டத்தில் 7ஆவது பிரிவு இதை உறுதி செய்கிறது.
- தேர்தலை நடத்துவதற்கு தேவையான அதிகாரிகளையும் ஊழியர்களையும் தேர்தல் ஆணையம் மாநில அரசிடம் இருந்துதான் கேட்டுப் பெற வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் வழங்கும் 324 வது உட்பிரிவு 6 கூறுகிறது.
- தேர்தல் ஆணையத்திற்கு தனியாக நிர்வாக் கட்டமைப்பு எதுவும் இல்லை.
- 1950 மற்றும் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் தேர்தல் ஆணையத்திற்கு உள்ள அதிகாரங்களை விரிவாக விளக்குகிறது. அதில் எந்த ஒரு இடத்திலும் அதிகாரிகளை மாற்றும் உரிமையை தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்படவே இல்லை.
- இடமாற்றம் செய்யப்படும் அதிகாரிகள் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளில் எந்த குறுக்கீடுகளை செய்தார்கள் என்பதற்கான காரணங்களை கூறாமலே இடமாற்ற அதிகாரத்தை கையில் எடுப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?
- இந்த இடமாற்றங்களை தேர்தல் ஆணையம் அண்மைக் காலமாகவே கையில் எடுத்திருக்கிறது.இதனால் அதிகாரிகள் மன பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். மொகிந்தர்கில்சிங் வழக்கில் உச்சநீதிமன்றம் **“இந்திய அரசியல் சட்டத்தின் கீழ் பேரரசுகளும் இல்லை; பேர் அரசர்களும் இல்லை. தேர்தல் ஆணையம் தனக்கு வழங்கப்பட்ட சட்ட உரிமையை ஆயுதம் ஆக்கக்கூடாது வரம்பற்ற அதிகாரத்திற்கு நமது அரசியல் அமைப்பில் இடமில்லை”** என்று தேர்தல் ஆணையத்தின் தலையில் குட்டு வைத்திருக்கிறது.

அதிகாரிகளை மாற்றுவதாலேயே ஆட்சி மாற்றம் வந்துவிடாது. எடப்பாடிகளும் அமித்க்ஷாக்களும் அடுத்த இரண்டு வாரங்களுக்கு இப்படி குத்தாட்டம் போடலாம். தேர்தல் முடிவுக்கு பிறகு திராவிட மாடல் ஆட்சி இதே அதிகாரிகளை அந்தந்த பதவிகளில் நியமிக்கப்படுவதை தமிழ்நாடு பார்க்கப் போகிறது.

## வாசகர் கடிதம்

கடந்த 12.03.2026 வெளிவந்த இதழில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்த 1971 தேர்தல் வரலாற்றைப் பற்றிய கட்டுரையை வாசித்தேன். இன்றைய தலைமுறைக்கு பெரியாரை எடுத்துச் செல்லும் தேவைக்கேற்ப எழுதப்பட்ட அருமையான கட்டுரை அது. சமகாலத்தில் பெரியாரை மலினப்படுத்தும் நோக்கத்தோடு இங்கு பல்வேறு சங் பரிவார்களும், அவர்களின் அடிவறுடிகளும் முழுமூச்சாக செயல்படுவார்களெனில் அவர் வாழ்ந்த காலத்தில் எப்படி இருந்திருக்குமென்பதை புரிந்து கொள்ள உதவியது.

கொள்கைத் தெளிவற்றும், கொள்கைப்பிடிப்பின்றி அலையாடிக்கொண்டிருக்கும் பொம்மை அரசியல் தலைவர்களும், அவதூறை மட்டும் அள்ளித்தெளிக்கும் பகுத்தறிவு குன்றியோரும் பெரியாரின் நிகரற்ற கொள்கைப் பிடிப்பிற்கும், இயக்கத்தை கட்டி எழுப்பிய அவரின் இயக்க அரசியலிற்கும் வெகு தூரத்தில் நிற்பதை பிரித்துப் பார்க்க உதவுகிறது. இனியும் இது போன்ற கட்டுரைகள், பெரியாரின் களமாடல்களென சமகாலத்தில் பொருந்திப்போகும் செயல்கள் அனைத்தையும் எழுத வேண்டுகோள் விடுக்கிறேன். இளைய தலைமுறையினர் திராவிட அரசியலைக் கற்கும் ஆர்வத்தை இன்னும் தூண்டுகிறது.

-யதிந்தர், மதுரை.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# சென்னை, திருப்பூர், கோவை, சேலம், ஈரோட்டில்

## மதச்சார்பற்ற கூட்டணி வேட்பாளர்களுக்கு கழகத் தோழர்கள் தீவிர வாக்கு சேகரிப்பு

**சென்னை:** ஆயிரம் விளக்கு தொகுதி திமுக வேட்பாளர் மருத்துவர் எழிலன், ஏப்ரல்-2 மாலை 4 மணிக்கு, தியாகராய நகர் அமுதம் குடியிருப்பு பகுதியில் தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டார். கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர் மா. வேழ வேந்தன், மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு. கோபிநாத், பாரி சிவா, குடிஅரசு, சரண் உள்ளிட்ட பலர் நேரில் சந்தித்து, ஆதரவு தெரிவித்தனர்.

**சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி** தொகுதியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வேட்பு மனு தாக்கல் செய்ததையொட்டி, திமுக பகுதிச் செயலாளர் ஏ. ஆர்.எம். காமராஜ் அவர்களின் அழைப்பின்பேரில், மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர் மா. வேழ வேந்தன், திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு. கோபிநாத், பகுதிச் செயலாளர் சே. ராஜேஷ், பகுதி அமைப்பாளர் த.நா. சூர்யா, மயிலை அருண் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.






திமுக வேட்பாளர்கள் தியாகராய நகர் தொகுதி ராஜா அன்பழகன், ஆயிரம் விளக்கு தொகுதி மருத்துவர் எழிலன், சைதை தொகுதி அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்து. கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் மற்றும் தோழர்கள் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

**வடசென்னை:** திருவிக நகர் தொகுதியில் திமுக வேட்பாளர் கே.எஸ்.ரவிச்சந்திரனை, ஆதரித்து கழக மாவட்ட அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி தலைமையில் தோழர்கள் பரப்புரையில் ஈடுபட்டனர். ***12/04/2026* அன்று எழும்பூர்** தொகுதி வேட்பாளர் பிரசன்னா அவர்களுக்கும் திருவிக நகர் தொகுதி வெற்றி வேட்பாளர் கே. எஸ் ரவிச்சந்திரன் அவர்களுக்கும் வாக்கு சேகரிப்பு ஈடுபடும் போது வடசென்னை சார்பாக திராவிட விடுதலைக் கழகம் ந.தஷ்ணாமூர்த்தி, வட சென்னை அமைப்பாளர் மற்றும் சேத்துப்பட்டு ராஜன் வடசென்னை அமைப்பாளர் இவர்கள் தலைமையில் வடசென்னை இளைஞர் அணி தோழர் சஞ்சய் மற்றும் குடியரசு , சேத்துப்பட்டு தமிழ் குமரன், குறள்அரசி ஆகியோரால் பொன்னாடை அணிவித்து புத்தகத்தையும் கொடுத்து ஆதரவளித்தோம்.

**மயிலாப்பூர்: *ZERO BJP*** இலக்கை நோக்கி, மயிலாப்பூர் தொகுதியில் ஒரு வார தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்வது குறித்து, 9/4/26) மாலை 6 மணிக்கு, திவிக தலைமை அலுவலகத்தில், "மக்கள் இயக்கங்களின் கூட்டமைப்பு 2026" சார்பில், கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. மயிலாப்பூர் திமுக வேட்பாளர் த.வேலு அவர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்வது என்று முடிவு செய்தனர். பல்வேறு அமைப்புகள் பங்கேற்ற இந்நிகழ்வில், கழகத்தின் சார்பில், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர் மா.வேழ வேந்தன், மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், ஏசு குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

**மொடக்குறிச்சி:** தொகுதி வேட்பாளராகப் போட்டியிடும் மதிமுகவை சேர்ந்த செந்தில்நாதன் அவர்களை ஆதரித்து மதிமுக பொதுச் செயலாளர் துரை வைகோ பரப்புரை மேற்கொண்டார். பரப்புரையில் அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, ஈரோடு மாவட்டத் தலைவர் செல்வராஜ் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கோபிசெட்டிபாளையம்** சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் நல்லசிவம் நம்பியூர் வாக்கு சேகரிப்பு பயணத்தில் இராம.இளங்கோவன் (வெளியீட்டுச் செயலாளர்) தலைமையில், செல்வக்குமார் (மாவட்ட செயலாளர் ஒருங்கிணைப்பில் ஈரோடு வடக்கு கழகத் தோழர்கள் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

**திருப்பூர்:** 05-06- 2026 மாலை 5 மணி அளவில் திருப்பூர், அவிநாசி சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் கோகிலாமணி அவர்களின் அறிமுக கூட்டம் சேவூர் சாலை , கொங்கு கலை அரங்கில் நடைபெற்றது. திவிக சார்பாக வேட்பாளர் டாக்டர் கோகிலா மணி அவர்களுக்கு கழகப் பொருளாளர் சு.துரைசாமி வெற்றி பெற வாழ்த்தி புத்தகம் வழங்கி சிறப்பித்தார். நிகழ்வில் மாவட்ட தலைவர் முகில் ராசு, தெற்கு பகுதிச் செயலாளர் ராமசாமி, மாநகர அமைப்பாளர் முத்து, வடக்கு ஒன்றிய செயலாளர் அய்யப்பன், தோழர்கள் இனியன், பழனி தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் பாலா உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியின் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் வேட்பாளர் (சிபிஅய்) ரவி என்ற மா.சுப்பிரமணியம், திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதியின் தி.மு.க.வேட்பாளர் கே. என். தினேஷ்குமார் ஆகியோர் திராவிடர் விடுதலைக் கழகத்தின் நிர்வாகிகளை மரியாதை நிமித்தமாக சந்தித்து திவிகவின் ஆதரவிற்கு நன்றி தெரிவித்தனர். வேட்பாளர்களுக்கு கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்டத் தலைவர் முகில் ராசு ஆகியோர் வரவேற்பளித்து பயனாடை அணிவித்து புத்தகங்களை பரிசளித்தனர். வேட்பாளர்களுடன் துணை மேயர் பாலசுப்பிரமணியம், சி.பி.அய் மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன், தொழிற்சங்க பொறுப்பாளர் சேகர் மற்றும் திமுக நிர்வாகிகள் டிகேடி மு.நாகராஜ் தெற்கு பகுதி கழகச் செயலாளர் நந்தகோபால் திருப்பூர் மாவட்டக் கழகத் தோழர்கள் தனபால், மாரிமுத்து, மாதவன், ராமசாமி, அய்யப்பன், இனியன், குணா ஆகியோர் பங்கேற்றனர்.

**அவினாசி:** 13-04-2026 திங்கள் கிழமை மாலை 4.30 மணி அளவில் அவினாசி சட்டமன்ற தொகுதியின் திமுக வெற்றி வேட்பாளர் டாக்டர் கோகிலா மணி அவர்களுக்கு கழக பொருளாளர் சு. துரைசாமி தலைமையில் திருப்பூர், கோவை மாவட்டக் கழகம் இணைந்து வாக்கு சேகரித்தது. மாலை 4.30 மணி அளவில் தொடங்கி சேவூர் நான்கு சாலை சந்திப்பு, கைகாட்டி புதூர், ஸ்டேட் பேங்க் எதிரில் ஆட்டையம் பாளையம், அவிநாசி புதிய பேருந்து நிறுத்தம், பெரியாயி பாளையம் ஆகிய பகுதிகளில் வாக்கு சேகரித்தனர். கழகப் பொருளாளர் சு. துரைசாமி, கழக சமூக வலைதளப் பொறுப்பாளர் பரிமளராசன், நிர்மல் குமார் (கோவை மாநகரத் தலைவர்), பாரதி சுப்பராயன் (தலைவர், நவீன மனிதர்கள் இயக்கம்), பகுத்தறிவாளர் கழக குமாரராசா தி .க, தமிழ் அமுதன் மார்க்சிய முற்போக்காளர் பேரவை, மாநகர அமைப்பாளர் முத்து, மாவட்ட தலைவர் முகில் ராசு வாகனத்தில் வாக்கு சேகரித்தார்கள். காதர் தமுஎச, அருண் (அமைப்புச் செயலாளர், நவீன மனிதர்கள் இயக்கம்), லெனின் (பொருளாளர், நவீன மனிதர்கள் இயக்கம்), மாரிமுத்து மாநகர துணை தலைவர், அய்யப்பன் வடக்கு ஒன்றிய அமைப்பாளர், குணா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர்:** சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் அறிமுகம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் 01.04.2026 மாலை 4.00 மணியளவில் மேட்டூர் (நவப்பட்டி) திருமலை மாதவி மஹாலில் நடைபெற்றது. அங்கு திமுக சார்பில் மிதுன் சக்கரவர்த்தி போட்டியிடுகிறார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்துகொண்டு மேட்டூர் தொகுதியின் வேட்பாளர் மிதுன் சக்கரவர்த்தி அவர்களின் வெற்றிக்கு திராவிடர் விடுதலைக் கழகம் உறுதுணையாக இருக்கும் என்பதை தெரிவித்து, பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வாழ்த்தினார். இந்த கூட்டத்தில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் அனைத்து கட்சி நிர்வாகிகள், திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.






சேலம் மாவட்டக் கழகத் தோழர் மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் வீடு வீடாக கடந்த 5 நாட்களாக பரப்புரை மேற்கொண்டு வருகிறார்கள். மேட்டூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேச்சேரி மேற்கு ஒன்றியம் வெள்ளார் ஊராட்சியில் உள்ள சின்னகம்மம்பட்டி, தம்பியண்ணன் கோவில், கைக்காட்டி வெள்ளார், கோவில் வெள்ளார், எம்.காளிப்பட்டி ஊராட்சியில் மூர்த்திப்பட்டி, குஞ்சாண்டியூர், வீரக்கல்புதூர் ஆகிய பகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் மிதுன் சக்கரவர்த்திக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்யுமாறு கழக சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் தலைமையில் வீடு வீடாக சென்று மக்களை நேரில் சந்தித்து, ஆதரவு திரட்டி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டோம். இதில் கழகத் தோழர்கள் கிருஷ்ணன், தங்கதுரை, சிவசண்முகம், சபரி, பாரப்பட்டி முருகேசன், சுவதரன், கே.ஆர்.தோப்பூர் கண்ணன், பிரபாகரன், முத்துராஜ், கவியரசு, உமாசங்கர், நாகராஜ், கோகுல், சந்திரசேகரன், பேரறிவாளன், தமிழருவி ஆகியோர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

## பாராட்டத்தக்க முயற்சி குழந்தைகளுக்கான காமிக்ஸ் நூல்கள்!

விஜயபாஸ்கர் அறக்கட்டளை மற்றும் CISS அறக்கட்டளை இணைந்து பெரியார் வரலாற்றை குழந்தைகளுக்கான பட கதையாக வெளியிட்டுள்ளதை பாராட்டி வரவேற்க வேண்டும். " ஏன் என்று கேட்க சொன்னவர் பெரியார்" ஒரு குருகுல கதை, தமிழ்நாடு தந்த அண்ணா என்ற தலைப்புகளில் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டுள்ளனர். முனைவர் நா.இல நரேன்குமார் கருத்தாக்கத்தில், முனைவர் கோவி. கனக விநாயகம் தமிழாக்கம் செய்துள்ளார். படம் மற்றும் நூலகத்தை நா.இல நரேன்குமார் ஏ.அய் உதவியுடன் மிகச் சிறப்பாக வடிவமைத்துள்ளார். 32 பக்கங்களில் வெளியிட்ட ஒவ்வொரு நூல்களின் விலை ரூ. 50 மட்டுமே. குழந்தைகளிடம் கருத்துக்களை பதிய வைக்கும் இந்த சிறிய முயற்சிகளை பாராட்ட வேண்டும். தோழர்கள் இந்த நூல்களை அன்பளிப்பாகவும் பரப்புவதற்கு பயன்படுத்தி இத்தகைய முயற்சிகளை ஊக்கப்படுத்த வேண்டும்.



விஜயபாஸ்கர் அறக்கட்டளை மற்றும் CISS பவுண்டேசன் இணைந்து நடத்திய சிறார்களுக்கான படக்கதைப் புத்தகம் வெளியீட்டு விழா ஏப்ரல்-12, 2026 அன்று மாலை கலப்பை பதிப்பகம் கே.கே நகரில் நடைபெற்றது. தோழர் சு. விஜயபாஸ்கர் அவர்களின் முதலாமாண்டு நினைவுநாளை முன்னிட்டு நூல்கள் வெளியிடப்பட்டன. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. குழந்தைகள் பயன்பெறும் வகையில் தயாரிக்கப்பட்ட இந்த புத்தகம், குழந்தைகளின் கைகளால் வெளியிடப்பட்டது என்பது நிகழ்வின் சிறப்பாகும். வாலாசா வல்லவன் மற்றும் பிரகாஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

விஜயபாஸ்கர் மறைந்த பின்னர், அவரது உடல் மட்டுமே இல்லாமல் போனது; ஆனால் அவர் எடுத்துக் கொண்ட கொள்கைகளும், தொடங்கிய பணிகளும் இன்னும் தொடர வேண்டியவையாக உள்ளன. அந்த பணிகளை முன்னெடுத்து செல்வதே அவரை நம்மிடையே உயிருடன் வைத்திருப்பதாகும் என கூறி அந்தப் பணிகளில் அவரது இணையர் காயத்ரி மற்றும் போராசிரியர் கனகவிநாயகம் ஆகியோர் பங்காற்றினார். இந்த புத்தகம் வெளிவர உதவியும், உறுதுணையாக இருந்தார் பத்திரிக்கையாளர் நீரை. மகேந்திரன், நிகழ்வை ஒருங்கிணைத்த *PeriyarBooks.Com* மணிகண்டன், பிரபாகரன் அழகர்சாமி ஆகியோர் பங்காற்றினர். சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் பலர் பங்கேற்றனர்.

**தொடர்புக்கு**
**பெரியார் புக்ஸ் -8428455455**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : April 16, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran